06

LIBRARY EASTERN UNIVERSITY, SRI LANKA 27 APR 2016

# EASTERN UNIVERSITY SRI LANKA

## FACULTY OF ARTS AND CULTURE

## First Year External Degree Examination in Arts & Culture – Repeat (External) - 2016

## (January – February 2016)

## CC 104 MANAGEMENT STUDIES

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் - 3 மணித்தியாலங்கள்

01. a) *"நிறுவனத்தில் முகாமையாளர் பல்வேறு மட்டங்களில் செயற்பட்டாலும் குறிப்பிட்ட நிலைமையினை ஆராய்ந்து அந்நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான திட்டங்களை வகுப்பதற்குத் தேவையான ஆற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்."*

பொதுவாக நிறுவனத்தில் காணப்படுகின்ற வேறுபட்ட முகாமை மட்டங்களையும் அம்மட்டங்களுக்கேற்ப முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய இத் தேர்ச்சித் திறன்களையும் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) **"நிறுவனம்"** என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் தந்து, நிறுவனத்திற்கான குறிக்கோளினை உருவாக்குகின்றபோது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகளை பொருத்தமான உதாரணம் தந்து விளக்குக.

(06 புள்ளிகள்)

c) *"முகாமையாளர்கள் நிறுவனத்தின் இலக்கினை அடையும் பொருட்டு பல்வேறு வகையான தடைகளை வெற்றிகொள்ளல் வேண்டும். முகாமையாளர்கள் இத்தடைகள் அல்லது பிரச்சினைகளை வெற்றிகொள்வதன் மூலம் நிறுவனத்தின் இலக்கினை சிறப்பாக அடைந்து கொள்ளமுடியும்".*

மேற்கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில் தற்கால நிறுவனங்கள் எதிர்கொள்கின்ற முகாமைத்துவப் பிரச்சினைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 22 புள்ளிகள்)

07

02. a) *"சூழற்காரணிகள் அடிக்கடி மாற்றமடைவன. சூழற் காரணிகளைக் கருத்திற்கொ நிறுவனம் தனது செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும்."*

மேற்கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில் நிறுவனத்தின் நடவடிக்கைகளில் தாக்க ஏற்படுத்தும் சூழற் காரணிகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளி

b) *"நிறுவன வெற்றிக்கும் அதன் வளர்ச்சிக்கும் சிறந்த திட்ட இன்றியமையாததாகும்."*

இக்கூற்றின் அடிப்படையில் சிறந்த திட்டமிடல் மூலம் நிறுவ பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்களை விளக்குக.

(06 புள்ளிக

c) *"திட்டமிடல் எனப்படுவது நிறுவனத்தின் நோக்கத்தினை (Objective) வரையறு அதனை அடையும் பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்து அவற்றி ஒன்றிணைத்துக் கொள்வதனைக் குறிக்கின்றது".*

இக்கூற்றின் அடிப்படையில் சிறந்த திட்டமிடல் கொண்டிருக்க வேண்டிய பண்புகள விளக்குக.

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக

03. a) *"ஒழுங்கமைத்தல் எனப்படுவது நிறுவனம் தனது நோக்கத்தினை அடையும் பொரு திட்டங்களை அமுல் படுத்துவற்காக செயற்பாடுகளையும், வளங்களைய ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் செயற்பாட்டினை குறிக்கின்றது"*

இக்கூற்றின் அடிப்படையில் ஒழுங்கமைத்தல் செய்முறையின் பிரதான செயற்பாடுகள விளக்குக.

(08 புள்ளிகள

b) நிறுவனம் ஒன்றில் ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளும் போது கருத்திற்கொள்ளப் வேண்டிய ஒழுங்கமைத்தல் தத்துவங்களை விளக்குக.

(06 புள்ளிகள்

c) நிறுவனக் கட்டமைப்பினை வடிவமைக்கும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டி பிரதான காரணிகளை விளக்குக.

(06 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

04. a) நிறுவனங்கள் தமது விருப்பத்திற்கேற்ப கட்டுப்படுத்தல் முறைகளைத் தேர்ந்தெடுக்க முடியும். வழமையில் நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற பிரதான கட்டுப்படுத்தல் வகைகளை பொருத்தமான உதாரணம் தந்து விளக்குக.

(06 புள்ளிகள்)

b) *"கட்டுப்படுத்தல் எனப்படுவது, திட்டமிட்டபடி கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்தி கொள்வதனைக் குறிக்கும்".*

இக்கூற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தல் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் பிரதான நுட்பங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

c) நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுப்படுத்தல் குறைவாக அல்லது மிகையாக காணப்படுகின்றபோது ஏற்படக்கூடிய தாக்கங்களை பட்டியலிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. a) *"ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் வினைத்திறனான தலைமைத்துவம் அவசியமாகும். நிறுவனத்தில் தலைமைத்துவம் திறனற்று காணப்பட்டால் அந்நிறுவனத்தின் முகாமைத்துவமும் திறனற்று காணப்படும்"*

இக்கூற்றின் அடிப்படையில் "தலைமைத்துவம்" என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி, தலைமைத்துவ பண்புகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

b) ஊழியர்களை ஊக்குவிப்பது தொடர்பாக முகாமையாளர் கருத்தில் கொள்ள வேண்டிய. விடயங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

c) ஊழியர் ஊக்கப்படுத்தல் தொடர்பாக இருகாரணிக் கோட்பாட்டின் பங்களிப்பினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)